# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 160 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 06.09.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# 9ந் தேதி கூட்டணி கட்சிகளுடன் த.வெ.க. ஆலோசனைக்கூட்டம்

## கம்யூனிஸ்டு கட்சிகள் புறக்கணிப்பு?



த.வெ.க. ஆதரவு கட்சி தலைவர்களை, அமைச்சர்கள் நேற்று சந்தித்தனர். 9-ந் தேதி நடக்கும் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுத்தனர்.

தமிழகத்தில் நடைபெற்று முடிந்த 17-வது சட்டசபை தேர்தல், தமிழ்நாட்டில் அரசியல் களத்தையே புரட்டி போட்டது. 2-வது முறையாக தொடர்ந்து ஆட்சிக் கட்டிலில் அமரப்போகிறோம் என்ற எதிர்பார்ப்பில் இருந்த தி.மு.க.வுக்கு ஏமாற்றத்தையும், கட்சி தொடங்கிய சில ஆண்டுகளிலேயே ஆட்சியை பிடித்த த.வெ.க.வுக்கு இன்ப அதிர்ச்சியையும், அ.தி.மு.க.வுக்கு சற்று பின்னடைவையும் இந்த தேர்தல் கொடுத்தது.

இதுமட்டுமா? தேர்தலுக்கு முன்பு ஒரு கூட்டணியில் இருந்த கட்சிகள், தேர்தலுக்கு பிறகு இன்னொருகூட்டணிக்கு தாவி பயணித்த நிகழ்வும் அரங்கேறின. அந்த வகையில்ஆட்சிஅமைப்பதற்கு உறுதுணையாக இருக்க த.வெ.க.வுடன், தி.மு.க.வில் அங்கம் வகித்து வந்த காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, வி.சி.க., ம.தி.மு.க., இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் ஆதரவுக்கரம் நீட்டின. அமைந்திருக்கும் ஆட்சிக்கான கூட்டணியாக மட்டுமல்லாமல், அடுத்து வர இருக்கும் தேர்தல்களை சந்திக்க இருக்கும் அரசியல் கூட்டணியாகவும் வலுப்படுத்தும் நோக்கில் கடந்த ஜூலை மாதம் 1-ந்தேதி த.வெ.க. ஆதரவு கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தி முடித்தனர்.

சென்னை கோவளத்தில் உள்ள தனியார் விடுதியில் நடந்த இந்த கூட்டத்தில், முதல்-அமைச்சரும், த.வெ.க. தலைவருமான விஜய் தலைமை தாங்கினார். இதில் காங்கிரஸ், வி.சி.க., ம.தி.மு.க., இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி தலைவர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.இந்தமுதல் கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்டு மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிகள் பங்கேற்கவில்லை.

அந்த கூட்டத்தில், கூட்டணிக்குஒருபொதுவான பெயர் சூட்டுவது, ஒருங்கிணைப்புக் குழு அமைப்பது மற்றும் பொதுவான குறைந்தபட்ச செயல்திட்டத்தை உருவாக்குவது குறித்து விவாதிக்கப்பட்டதாக சொல்லப்பட்டது. இந்த சூழ்நிலையில் த.வெ.க. மூத்த நிர்வாகிகளும், அமைச்சர்களுமான ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, சி.டி.ஆர்.நிர்மல்குமார், ராஜ்மோகன் ஆகியோர் நேற்று தங்கள் கூட்டணி கட்சி தலைவர்களையும், நிர்வாகிகளையும் நேரில் சந்தித்தனர்.

அதன்படி, சென்னை தியாகராயநகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்டு கட்சி மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி அலுவலகத்துக்கு நேரில் சென்று மாநில செயலாளர்கள் வீரபாண்டியன் மற்றும் சண்முகத்தை தனித்தனியாக சந்தித்து பேசினார்கள். அப்போது நிர்வாகிகளும் உடன் இருந்தனர். அதனைத் தொடர்ந்து, சென்னை அண்ணாநகரில் உள்ள ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவையும் அவர்கள் சந்தித்து பேசினார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாநில செயலாளரை சந்தித்துவிட்டுவெளியே வந்த அமைச்சர் நிர்மல்குமார், "இது மரியாதை நிமித்தமான சந்திப்பு" என்றும், வைகோவை சந்தித்துவிட்டு வெளியே வந்த போது, "முதல்-அமைச்சருக்கு உற்றதுணையாக இருக்கும் திராவிட இயக்கத்தின் மூத்த தலைவரை மரியாதை நிமித்தமாக சந்தித்தோம். 9-ந்தேதி நடைபெற உள்ள கூட்டத்தில் பங்கேற்கவும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதில் முதல்-அமைச்சரும் பங்கேற்கிறார்" என்றும் கூறினார்.

இதனைத்தொடர்ந்து "த.வெ.க. கூட்டணி ஆலோசனைக் கூட்டத்தில் முதல்-அமைச்சர் சார்பில் எனக்கு அழைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அவசியம் பங்கேற்போம்" என ம.தி.மு.க.பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார். 9-ந் தேதி நடைபெறும் த.வெ.க. ஆதரவு கட்சி தலைவர்களின் 2-வது ஆலோசனை கூட்டத்தில் கூட்டணி குறித்த பெயர் அறிவிக்கப்பட வாய்ப்பு இருப்பதாக சொல்லப்படுகிறது.

கூட்டத்தில் கம்யூனிஸ்டு கட்சி பங்கேற்குமா? த.வெ.க. ஆதரவு கட்சிகளின் முதல் ஆலோசனைக் கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்டு பங்கேற்காத நிலையில், 2-வது கூட்டத்தில் பங்கேற்பது குறித்து முடிவெடுக்கப்பட்டதா? என்பது குறித்து இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயலாளர் வீரபாண்டியனிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, அவர் கூறியதாவது:-

இடதுசாரிகளின் ஒருங்கிணைப்புக் குழு நாளை (இன்று) கூடுகிறது. அதன் பிறகு எங்கள் நிர்வாக, செயல், மாநிலக்குழு கூட இருக்கிறது. முதல்-அமைச்சர் சொன்னதாக அமைச்சர்கள் கூறிய கருத்தையும் அதில் விவாதிப்போம். அப்போதுள்ள சூழலை பத்திரிகை, ஊடகத்தினருக்கு தெரிவிப்போம்.

இடதுசாரிகள் மக்கள் அளித்த தீர்ப்புக்கு மதிப்பளித்து த.வெ.க.வை ஆதரித்தோம். அதேபோல் மக்கள் அதிகாரத்தில் கவர்னர் அமர்ந்துவிடக்கூடாது என்பதற்காக த.வெ.க.வை வெளியில் இருந்து ஆதரித்தோம். கூட்டணி, அமைச்சரவையில் இல்லை.வெளியில் இருந்து ஆதரிப்பதால், உழைக்கும் மக்களின் கோரிக்கைகளுக்காக சமரசம் இல்லாமல் குரல் எழுப்புகிறோம்.

அரசு நல்லதிட்டங்கள், அரசியல் திசையில் நகரும்போது ஆதரிப்போம். முதல் கூட்டம் விருந்து. கூட்டணி குறித்து அதில் பேசுவது உடன்பாடு அல்ல. நாங்கள் சென்றால் அந்த கூட்டணியில் பங்கேற்க இயலாது. விருந்தின் தன்மை கெட்டுவிடக்கூடாது என்பதால் முதல்-அமைச்சரிடம் அதுபற்றி தெரிவித்து பங்கேற்கவில்லை. இப்போது கூட்டணி தொடர்பான அழைப்பு வந்திருக்கிறது.அதுபற்றி நாங்கள் முடிவெடுக்க முடியாது. கட்சிதான் முடிவு செய்யும்.

இவ்வாறு கூறினார்.

# முன்னாள் அமைச்சர் கே.என். நேரு மற்றும் அவரது சகோதரருக்கு தொடர்புடைய 19 இடங்களில் சோதனை



சென்னை: நகராட்சி நிர்வாகம்மற்றும்குடிநீர் வழங்கல் துறை முன்னாள் அமைச்சர் கே.என் நேரு மற்றும் அவரது சகோதரருக்கு தொடர்புடைய 20-க்கும் மேற்பட்ட இடங்களில்லஞ்சஒழிப்புத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். கடந்த 2025-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3-ஆம் தேதி அமலாக்கத்துறை அதிகாரிகள்,தமிழ்நாடுடிஜிபிக்கு ஒரு கடிதம் அனுப்பினர். அந்த கடிதத்தில், டெண்டர் முறைகேடு மற்றும் கட்சி நிதி தொடர்பாக கே.என். நேரு மற்றும் அவர் தொடர்புடைய நபர்கள் முறைகேடு செய்திருப்பதாகவும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த கடிதம் சமூக வலைதளங்களில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. மேலும், இந்த கடிதம் வெளியானது தொடர்பாக அமலாக்கத் துறை அதிகாரிகள், நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்ததும், இது தொடர்பான விசாரணை சிபிசிஐடி அலுவலகத்தில் நிலுவையில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கே.என்.நேருவிற்கு தொடர்புடைய இடங்களில் சோதனை

இதனைத் தொடர்ந்து, அமலாக்கத்துறை சார்பில், தமிழ்நாடு டி.ஜி.பி, தலைமைச் செயலாளர் உள்ளிட்டோருக்கு அனுப்பட்ட கடிதத்தில், தூய்மைப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள், சாலைபோடுதல்,நபார்டு திட்டங்கள், தூய்மைப் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் எடுத்தல் உள்ளிட்ட பல்வேறு ஒப்பந்தங்களில், சில நிறுவனங்களுக்கு சாதகமாக லஞ்சம் பெற்றுக் கொண்டு ஊழல் நடந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும், அரசு அதிகாரிகள் லஞ்சத்தை பணமாகமட்டும்வாங்காமல், கட்சி நிதியாக வாங்கியதாகவும் அமலாக்கத்துறை அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதிலும் குறிப்பாக, ஒவ்வொரு ஒப்பந்தத்திலும் 7.5 முதல் 10 சதவீதம் வரை கமிஷனாக ஒப்பந்த தொகையில் இருந்து லஞ்சமாக கொடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டிருந்தது. அந்த வகையில், ரூ. 1,020 கோடி ரூபாய் அளவிற்கு லஞ்சம் கைமாறி இருப்பதாக அமலாக்கத்துறை அனுப்பிய கடிதத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டு இருந்தது. அதற்குரிய ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அமலாக்கத்துறை குறிப்பிட்டிருந்தது.

இதனால், கடந்த ஆட்சியில்நகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சராக இருந்த கே.என் நேரு, அவரது சகோதரர் ரவிச்சந்திரன்மற்றும்தொடர்புடைய அரசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அமலாக்கத்துறை தெரிவித்திருந்தது.

இந்நிலையில், இந்த வழக்கு தொடர்பாக (செப்டம்பர் 5) காலை முதல் தமிழ்நாடு லஞ்ச ஒழிப்பு துறை அதிகாரிகள் முன்னாள் அமைச்சர் கே.என். நேரு மற்றும் அவரது சகோதரருக்கு தொடர்புடையசென்னை, திருச்சிமற்றும்கோவையில் உள்ள சுமார் 20-க்கும் மேற்பட்ட இடங்களில் சோதனை மேற்கொண்டு வருகின்றனர். அதன்படி, சென்னையில் அடையாறு, திருவான்மியூர், ராஜா அண்ணாமலைபுரம், அண்ணாநகர் உள்ளிட்ட பகுதிகளில் சோதனை நடைபெற்று வருகிறது.

மேலும், ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள கே.என். நேருவின் இல்லத்திலும், ஆர்.ஏ.புரத்தில் உள்ள அவரது சகோதரர் ரவிச்சந்திரன் மற்றும் மணிவண்ணனுக்கு சொந்தமான டி.வி.எச். அலுவலகத்திலும் லஞ்ச ஒழிப்புத்துறையினர் சோதனை நடத்தி வருகின்றனர். தொடர்ந்து, திருச்சிதில்லைநகர்பகுதியில் உள்ள முன்னாள் அமைச்சர் கே.என். நேரு இல்லத்தில்லஞ்சஒழிப்புத்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனிடையே, கே.என். நேருவின் இல்லத்திற்கு முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ், மாநகராட்சி மேயர் அன்பழகன், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஆகியோர் குவிந்துள்ளனர். தொடர்ந்து கோவையிலும்,முன்னாள் அமைச்சர் கே.என். நேருவிற்கு தொடர்புடைய இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

கோவையில் உள்ள டிவிஎச் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் தீவிர சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

அங்கு முக்கிய ஆவணங்கள் மற்றும் நிதி பரிவர்த்தனைகள் குறித்து அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். அதே போல, கோவையில் நேருவின் மற்றொரு சகோதரரான ரவிச்சந்திரனுக்குச் சொந்தமான இடங்களிலும் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை நடந்து வருகிறது.

# வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு



சென்னை:

தமிழகத்தில் நாளை முதல் 6 நாட்களுக்கு ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: கடலோர தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் சுமார் 7.6 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. தெற்கு தெலுங்கானா முதல் மன்னார் வளைகுடா வரை ராயலசீமா மற்றும் தமிழக பகுதிகள் வழியாக சுமார் 0.9 கிமீ உயரத்தில் ஒரு காற்றழுத்த தாழ்வுபாதைநிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (செப்.6) மேற்கு தொடர்ச்சிமலைமாவட்டங்கள், மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும்.

7, 8 தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். 9, 10 தேதிகளில் மேற்கு தொடர்ச்சிமலைமாவட்டங்கள், வட கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழையும், 11-ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

உள் தமிழகத்தில் நாளை முதல் 9-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 7 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடும். கடலோர தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் வழக்கத்தை ஒட்டி இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் இடி,மின்னலுடன்கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக மதுரை மாவட்டம் பேரையூர், திருமங்கலத்தில் 8 செமீ, கடலூரில் 5 செமீ, திருநெல்வேலி மாவட்டம் நாலுமுக்கு, விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை, புதுச்சேரி திருக்கனூரில் 5 செமீ, மதுரை விமான நிலையம், திருவண்ணாமலை மாவட்டம் செங்கம், வெம்பாக்கம்,விருதுநகர் ஆகிய இடங்களில் தலா 4 செமீ மழை பதிவாகியுள்ளது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/

CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# வானொலியுடன் என்றும் இணைந்து இருங்கள் மாணவர்களுக்கு அறிவிப்பாளர் வேல்முருகன் அறிவுரை



தேவகோட்டை: தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில் மதுரை அகில இந்திய வானொலி நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் வேல்முருகன் மற்றும் அறிவிப்பாளர் நாகநந்தினி ஆகியோர் மாணவர்களுடன் கலந்துரையாடினர்.

நிகழ்ச்சிக்கு ஆசிரியை சிவரஞ்சனி வரவேற்புரை வழங்கினார். பள்ளித் தலைமையாசிரியர் லெ. சொக்கலிங்கம் தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியில் வேல்முருகன் பேசுகையில், அகில இந்திய வானொலியில் மாணவர்கள் நலன் சார்ந்த பல்வேறு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கான தேர்வு வழிகாட்டுதல் நிகழ்ச்சிகளும், மாணவர்களின் மன அழுத்தத்தைக் குறைக்கும் வகையில் மன நல ஆலோசகர்களின் வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டு வருகின்றன என்றார். வானொலி நிகழ்ச்சிகளில் மாணவர்கள் கலந்து கொண்டு பேசுவதன் மூலம் அவர்களின் பேச்சுத்திறன் வளர்வதுடன், எதிர்காலத்தில் வேலைவாய்ப்புக்கான நேர்முகத் தேர்வுகளிலும் பயனுள்ளதாக இருக்கும். வானொலி நிகழ்ச்சிகளை ஆன்லைன் மூலமாகவும், மொபைல் போனிலும் கேட்கவும் பார்க்கவும் முடியும் என்றார்.

படிக்கக்கூடிய காலம் பொற்காலம். மாணவர்கள் எந்தச் சூழ்நிலையையும் பொருட்படுத்தாமல் நன்றாகப் படிக்க வேண்டும். வானொலி அறிவிப்பாளராகப் பணியில் சேர குறைந்தது ஒரு பட்டப்படிப்பு முடித்திருக்க வேண்டும். தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளைத் தெளிவாக உச்சரிக்கும் திறனும், நன்றாகப் பேசும் திறனும் அவசியம். அரசு வானொலி நிலையத்தில் நிரந்தரப் பணியில் சேர அரசு தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று, நேர்முகத் தேர்விலும் வெற்றி பெற வேண்டும்.

அரசுத் தேர்வுகளில் பெரும்பாலும் பள்ளிப் பாடப்புத்தகங்களில் இருந்தே வினாக்கள் கேட்கப்படுவதால், மாணவர்கள் பாடங்களை நன்றாகப் புரிந்துகொண்டு படிக்க வேண்டும். வானொலி எப்போதும் நல்ல தகவல்களையும், மனதிற்கு இதமான பாடல்களையும் வழங்குகிறது. எனவே, வானொலியுடன் என்றும் இணைந்து இருங்கள் என்று அறிவுரை வழங்கினார்.

நிகழ்ச்சியை மாணவி நந்தனா தொகுத்து வழங்கினார். ஆசிரியர் ஸ்ரீதர் நன்றி கூறினார்.



# வ.உ.சி. 155வது பிறந்தநாள் விழா: சிலைக்கு மாலை அணிவித்து முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் தலைமையில் திமுகவினர் மரியாதை!

தூத்துக்குடியில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. 155-வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

சுதந்திரப் போராட்டத் தியாகி, செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனாரின் 155-வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தூத்துக்குடி பழைய மாநகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள வ.உ.சிதம்பரனாரின் முழு திருவுருவச் சிலைக்கு தூத்துக்குடி வடக்கு மாவட்டத் திமுக சார்பில், வடக்கு மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதாஜீவன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கிப் பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாநகரச் செயலாளர் ஆனந்தசேகரன், மாநகராட்சி துணை மேயர் ஜெனிட்டா, மாநில மீனவரணி துணைச்செயலாளர் புளோரன்ஸ், மாவட்ட அவைத் தலைவர் செல்வராஜ், மாவட்ட அணி நிர்வாகிகள் கவிதாதேவி, குபேர் இளம்பரிதி, அந்தோணிகண்ணன், பழனி, அருண்குமார், அருணாதேவி, சோமநாதன், சேசையா, பிரபுபகுதி செயலாளர்கள் சுரேஷ்குமார், ஜெயக்குமார், மேகநாதன், ராமகிருஷ்ணன், ரவீந்திரன், மாவட்ட பிரதிநிதிகள் சக்திவேல், நாராயணன், செல்வக்குமார் உட்படக் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.



தேனியில் சுதந்திர போராட்ட தியாகி தென்னாட்டு திலகர் காப்பாலோட்டிய தமிழர் வ உ சிதம்பரம்பிள்ளை அவர்களின் 155 வது பிறந்த நாளை முன்னிட்டு தேனி வழக்கறிஞர் நண்பர்கள் சார்பாக சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் மூத்த வழக்கறிஞர்கள் திரு. திருமலைவெங்கடேஷன், எஸ். ஆர். முருகன், வழக்கறிஞர்கள், சிவக்குமார், ஸ்ரீதர்.ST.ஆறுமுகம், சிவாஜி, மற்றும், குமரகுருபரன், சதீஷ்குமார், ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு மக்களுக்கு இனிப்புகள் வழங்கி பட்டாசு வெடித்து கொண்டாடினர். இதில் சிறப்பு விருந்தினராக வீர தமிழன் முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் பந்தல் ராஜா அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் இந்த நிகழ்வில் வ உ சி பிறந்தநாளை மத்திய மாநில அரசுகள் தியாகி வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்களின் பிறந்தநாளை வழக்கறிஞர் தினமாக அறிவிக்க வேண்டுமென கோரிக்கை வைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## விவசாயிகளை அடக்குமுறையால் கைது செய்வதை ஏற்க முடியாது

# தூத்துக்குடி, திருநெல்வேலி நான்கு வழி சாலையில் தட்டப்பாறை விளக்கு அருகே சாலை மறியல் சம்பவத்திற்கு பா.ஜ.க. கண்டனம்



தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில், வடகால் கடைமடை பாசன விவசாயிகள் கூட்டமைப்பு சார்பில், பாபநாசம் மற்றும் மணிமுத்தாறு அணைகளில் இருந்து விவசாயப் பயன்பாட்டிற்காக தண்ணீர் திறந்து விட வலியுறுத்தி தூத்துக்குடி திருநெல்வேலி நான்கு வழி சாலையில் தட்டப்பாறை விளக்கு அருகே சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளிடம் காவல்துறையினர் கடுமையான அணுகுமுறையை மேற்கொண்டதாக கூறப்படும் சம்பவத்திற்கு, தூத்துக்குடி தெற்கு மாவட்ட பா.ஜ.க. தலைவர் சித்ராங்கதன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: விவசாயிகளின் வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய நியாயமான கோரிக்கையை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளிடம் காவல்துறையினர் கடுமையான அணுகுமுறையை மேற்கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கது. விவசாயிகளை அடக்குமுறையின் மூலம் கைது செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. பாபநாசம் மற்றும் மணிமுத்தாறு அணைகளில் இருந்து விவசாயப் பயன்பாட்டிற்கு தண்ணீர் திறந்து விடுவது தொடர்பாக விவசாயிகளின் கோரிக்கையை அரசு உடனடியாக பரிசீலித்து உரிய நடவடிக்கைஎடுக்கவேண்டும். பிரச்னைக்கு தீர்வு காண்பதில் நடைமுறை சிக்கல்கள் இருந்தால், அதற்கான காரணங்களை அதிகாரிகள் விவசாயிகளிடம் நேரடியாக விளக்க வேண்டும். விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களின் கோரிக்கைக்கு தீர்வு காண்பதுதான் ஜனநாயக நடைமுறை. அதற்கு மாறாக காவல்துறையை பயன்படுத்தி போராட்டத்தை ஒடுக்குவதும், கைது நடவடிக்கைகளை மேற்கொள்வதும் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, விவசாயிகளின் கோரிக்கையை அரசு உடனடியாக கவனத்தில் கொண்டு, பாசனத்திற்கான தண்ணீர் பிரச்னைக்கு உரிய தீர்வு காண வேண்டும். இவ்வாறு தூத்துக்குடி தெற்கு மாவட்ட பா.ஜ.க. தலைவர் சித்ராங்கதன் தெரிவித்துள்ளார்.









ராணிப்பேட்டை மாவட்டத்தின் கல்வி முன்னேற்றத்தில் குறிப்பாக அரசு பள்ளி மாணவர்களின் கற்றல் நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தையும் நேரிய சிந்தனைகளையும் தொடர்ந்து வளர்த்தெடுக்கவும் மாணவர் நல ஆசிரியர்களை தொடர்ந்து ஊக்கப்படுத்தியும் இந்திய அரசியலமைப்பு வகுத்தளித்த சமத்துவம், சுதந்திர சிந்தனை, மற்றும் அனைவருக்குமானநீதிஆகியவிழுமியங்களைஉள்வாங்கிமாணவர்களின்எதிர்காலசிந்தனையைசெழுமைப்படுத்தியும், கல்வி நிலையங்களில் சுதந்திரமான கற்றலை வலுப்படுத்தும் விதமாகவும், தொடர் முன்னெடுப்புகளை செய்து வரும் ராணிப்பேட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்களை தமிழ்நாடு வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்கள் சங்கத்தின் சார்பாக வாழ்த்துகிறோம்.

# நோயாளியின் உயிரைக்காக்க குருதி தானம் செய்த காவல் உதவி ஆய்வாளர்




ஈரோட்டில் உள்ள தனியார்மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவருக்கு அவசரமாக ரத்தம் தேவைப்படுவதாக தகவல் கிடைத்தது.

இதையடுத்து, மனிதநேயத்துடன் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்ற ஈரோடு மாவட்ட வடக்கு போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் செந்தில்குமார், தனது குருதியை தானமாக வழங்கி நோயாளியின் உயிரைக் காக்க உதவினார்.

காவல் உதவி ஆய்வாளர் செந்தில்குமாரின் மனிதநேயச் செயலைப் பாராட்டும் வகையில், ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் D.V. கிரண் ஸ்ருதி, அவரை நேரில் அழைத்து பாராட்டி, பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார்.

காவல்துறை பணியுடன் சமூக அக்கறையையும் வெளிப்படுத்திய காவல் உதவி ஆய்வாளர் செந்தில்குமாரின் இந்த மனிதநேயச் செயல், பொதுமக்கள் மத்தியில் பாராட்டைப் பெற்றுள்ளது.



மதுரை மாவட்டம்,அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் குடமுழுக்கு நடைபெற உள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு தொடர்புடைய அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டனர். இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் மரு.டி.ஜி.வினய்,இ.ஆ.ப., அவர்கள் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., அவர்கள் மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.கல்லாணை அவர்கள், மதுரை மேற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர். தங்கப்பாண்டி அவர்கள், மதுரை கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.சோ.கார்த்திகேயன் அவர்கள், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.வி. கருப்பையா அவர்கள், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.எம்.கோபிசன் அவர்கள், மாநகராட்சி மேயர் (பொ) / துணை மேயர் திரு.தி.நாகராஜன் அவர்கள் மாநகராட்சி ஆணையாளர் திரு.கௌரவ் குமார்,இ.ஆ.ப., அவர்கள் இந்து சமய அறநிலையத்துறை திருச்சி மண்டல கூடுதல் ஆணையர் திருமதி என்.பொன்மணி ,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# கடைகளுக்கு நவம்பர் 1க்குள் தமிழில் பெயர் பலகை; சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு



சென்னை:

கடைகளுக்கு தமிழில் பெயர் பலகை வைக்க வேண்டும் என்ற உத்தரவின் அடிப்படையில், நவம்பர் 1-ஆம் தேதிக்குள் பெயர் பலகைகளை மாற்ற வேண்டும் என சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி உள்ளிட்ட தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் உள்ள கடைகளுக்கும் தமிழில் பெயர் பலகைகள் வைக்க வேண்டும் என 2025-ஆம் ஆண்டு ஜூன் மாதம் தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது.

அந்த உத்தரவில், பெயர் பலகைகளில், தமிழ் பெயருக்கு கீழ் ஆங்கிலத்தில் பெயர் வைத்துக் கொள்ளலாம் என்றும்,தவறினால் 2000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்த உத்தரவை அமல்படுத்த எதிர்ப்பு தெரிவித்து, மும்பையில் உள்ள இந்திய சில்லறை வர்த்தகர்கள் சங்கத்தின் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி கே.சுரேந்தர் முன்பு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது,

தமிழக அரசின் உத்தரவை அமல்படுத்த தயாராக இருப்பதாகவும், அதற்கு மூன்று மாத கால அவகாசம் வேண்டும் எனவும் மனுதாரர் சங்கம்தரப்பில்ஆஜரான வழக்கறிஞர் விஜயன் சுப்பிரமணியன் கோரிக்கை விடுத்தார்.

இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி, கடைசி வாய்ப்பாக நவம்பர் 1-ஆம்தேதிக்குள்,கடைகளின் பெயர் பலகைகளை தமிழில் மாற்ற வேண்டும் எனவும்,தவறினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கலாம் எனவும் உத்தரவிட்டு, வழக்கை முடித்து வைத்தார்.

செக்கிழுத்த செம்மல் வ.உ.சி.யின் 155வது பிறந்தநாள்:

# ஈரோட்டில் காங்கிரஸ் பேரியக்கம் சார்பில் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

## சுதந்திரப்போராட்ட வீரரின் தியாகத்தை நினைவுகூர்ந்து காங்கிரஸ் நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக பங்கேற்பு



சுதந்திரப் போராட்ட வீரரும், கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல் எனப் போற்றப்படுபவருமான வ.உ.சிதம்பரம் பிள்ளையின் 155-வது பிறந்தநாள் ஈரோட்டில் காங்கிரஸ் பேரியக்கம் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், கருங்கல்பாளையம் KAS நகர், ரங்க பவனம் அருகிலுள்ளசோழியவெள்ளாளர் பிள்ளை சங்க வளாகத்தில் அமைந்துள்ளவ.உ.சிதம்பரனார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சிக்கு மாமன்ற உறுப்பினர் மங்கேஸ்வரி புனிதன் தலைமைவகித்தார். மண்டல தலைவர்கள் கே.புனிதன், மாமரத்துபாளையம் எஸ். கோபி, ஈரோடு கௌதமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னாள் மாவட்ட தலைவர் டி.திருச்செல்வம்,வ.உ.சி. சிலைக்கு மாலை அணிவித்துமரியாதைசெலுத்தினார்

நிகழ்ச்சியில் மாவட்ட காங்கிரஸ் ஊடகப்பிரிவு தலைவர்ம.முகமது அர்சத், சிறுபான்மை துறை துணைத்தலைவர் கே.என்.பாஷா, மாவட்ட பொதுச்செயலாளர்கள் டி.கண்ணப்பன், ஏ.சி. சாகுல் ஹமீது, டெக்ஸ் அன்பழகன், கராத்தே யூசுப், சூளை கதிர்வேல், சேவா தள மாவட்ட தலைவர் எஸ். முகமது யூசுப், கலை இலக்கிய பிரிவு மாவட்ட தலைவர் ஜாபர் அலி, OBC பிரிவு மாவட்ட தலைவர் சூர்யா சித்திக், வழக்கறிஞர் பிரிவு மாவட்ட தலைவர் ஈ.ஆர். எஸ்.பிரகாஷ், மகிளா காங்கிரஸ் மாவட்ட தலைவி அன்னபூரணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும் மாவட்ட நிர்வாகிகள் ராஜாஜிபுரம் சிவா,குளம்சபீர்அகமது, டக்கர் செல்வம், இளைஞர் காங்கிரஸ் நிர்வாகி பத்ரி மற்றும் காங்கிரஸ் நிர்வாகிகள்,தொண்டர்கள் என பலர் திரளாக பங்கேற்றனர்.

சோழிய வெள்ளாளர் பிள்ளை சங்க தலைவர் கே.ஆர்.ரமேஷ் மற்றும் சங்க நிர்வாகிகளும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, வ.உ.சிதம்பரனார் சிலைக்கு மாலை அணிவித்துமரியாதைசெலுத்தினர்.

நிகழ்ச்சியின் நிறைவில்,ஈரோடு கிழக்கு சட்டமன்ற இளைஞர் காங்கிரஸ் தலைவர் பிரசன்னா, பங்கேற்ற அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினார்.

வ.உ.சிதம்பரம் பிள்ளை இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஆற்றிய பங்களிப்பும், ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக சுதேசி கப்பல் நிறுவனத்தை உருவாக்கி வெளிப்படுத்திய துணிச்சலும் தமிழர்களின் வரலாற்றில் என்றும் அழியாத தடமாகத் திகழ்கிறது.

அவரது பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற இந்நிகழ்ச்சி,தேசப்பற்று, தியாகம், சுதந்திர உணர்வு ஆகியவற்றை இளைய தலைமுறையினரிடம் கொண்டு செல்ல வேண்டிய அவசியத்தை மீண்டும் நினைவூட்டும் நிகழ்வாக அமைந்தது.

# ஆன்லைன் மோசடி: ரூ.2 லட்சத்தை இழந்த நபர் 2 மணிநேரத்தில் மீட்டு கொடுத்த போலீசார்



ஆந்திரமாநிலம்சித்தூர் மாவட்டம் சோமலா பகுதியில் ஆன்லைன் மோசடியில் ரூ.2.22 லட்சத்தை இழந்தவருக்கு, புகாரளித்த 2 மணி நேரத்திற்குள் பணத்தை மீட்டு தந்த போலீசாரை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு துஷார் துடி நேரில் அழைத்து பாராட்டினார்.

இதுகுறித்து சித்தூர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு துஷார் துடி நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

சித்தூர் மாவட்டம் சோமலாபகுதியைசேர்ந்த ஒருவரின்செல்போனுக்கு அடையாளம் தெரியாத நபர் ஒருவரிடம் இருந்து குறுஞ்செய்தி வந்தது. அதில், அவரது டிராக்டருக்கு ரூ.1,000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த தகவலை அவர் பார்த்தபோது, அது போலி என்பது தெரிய வந்தது. ஆனால்,சிறிது நேரத்திற்கு பிறகு அவரது வங்கி கணக்கில் இருந்து ரூ.2 லட்சத்து 22 ஆயிரத்து 54 திருடப்பட்டுள்ளது கண்டு அதிர்ச்சியடைந்தார்.

உடனடியாக பாதிக்கப்பட்ட நபர், சம்பந்தப்பட்ட வங்கி வாடிக்கையாளர் சேவை மையத்தை தொடர்பு கொண்டதோடு, '1930' என்ற சைபர் கிரைம் இணைய குற்ற உதவி எண்ணிலும் உடனடியாக புகார் செய்தார்.

2 மணி நேரத்தில் மீட்பு

பாதிக்கப்பட்டவர் துரிதமாகசெயல்பட்டு உடனே புகாரளித்ததால், சைபர் கிரைம் போலீசார் அந்த மோசடி கும்பலின் வங்கி கணக்கை உடனடியாக முடக்கினர். இதனால், திருடப்பட்ட ரூ.2.22 லட்சம் பணம், புகாரளித்த 2 மணி நேரத்திற்குள்ளாகவே முழுமையாக மீட்கப்பட்டு பாதிக்கப்பட்டவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சரியான நேரத்தில் துரிதமாக செயல்பட்டு பணத்தை மீட்ட சோமலா போலீசாரையும், சைபர் கிரைம் பிரிவினரையும் பாராட்டுகிறேன்.


பொதுமக்கள் யாராவது இதுபோன்று ஆன்லைன் பண மோசடி வலையில் விழுந்து பணத்தை இழக்க நேரிட்டால், பதற்றமடையாமல் உடனடியாக '1930' என்றஎண்ணைஅழைத்து புகார் அளிக்க வேண்டும். மோசடி கும்பலின் வங்கி கணக்குகளுக்கு பணம் சென்றடைந்த உடனே புகார் அளிக்கப்பட்டால், அந்த பணத்தை உடனடியாக முடக்கி மீட்டு கொடுப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.

அறிமுகம் இல்லாத நபர்களிடம் இருந்து வரும் அபராத தகவல்கள், பரிசு விழுந்திருப்பதாக வரும் லிங்குகள் அல்லது சந்தேகத்திற்குரிய செயலிகளை பொதுமக்கள் யாரும் கிளிக் செய்யவோ, பதிவிறக்கம் செய்யவோ வேண்டாம்.

இவ்வாறு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு துஷார் துடி கூறினார்.


# தூத்துக்குடி விசைப்படகு மீனவர்கள் திடீர் வேலைநிறுத்தம் 272 படகுகள் கரையில் நிறுத்தம்

தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தில் 'கலசல்' வகை மீன்களுக்கு உரிய விலை கிடைக்காததைக் கண்டித்து, தூத்துக்குடி விசைப்படகு மீனவர்கள் இன்று கடலுக்குச் செல்லாமல், வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாக 272 விசைப்படகுகள் துறைமுகத்திலேயே கரையில் நிறுத்தப்பட்டுள்ளன. தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தை மையமாகக் கொண்டு நூற்றுக்கணக்கான விசைப்படகுகள் மூலம் தினமும் கடலுக்குச் சென்று மீன்பிடித் தொழில் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், சமீபநாட்களாகக் கடலில் பிடிக்கப்பட்டு வரும்கலசல்வகைமீன்களுக்குத் துறைமுகத்தில் போதிய மற்றும் நியாயமான விலை கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது. மீ தூத்துக்குடியில்விசைப்படகு மீனவர்கள் கடலுக்கு செல்லாமல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதால், 272 படகுகள் மீன்பிடி துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.



தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தில் 'கலசல்' வகை மீன்களுக்கு உரிய விலை கிடைக்காததைக் கண்டித்து, தூத்துக்குடி விசைப்படகு மீனவர்கள் இன்று கடலுக்குச் செல்லாமல், வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாக 272 விசைப்படகுகள் துறைமுகத்திலேயே கரையில் நிறுத்தப்பட்டு உள்ளன.

# யானை வழித்தடங்கள் ஆய்வு: 3 மாதத்தில் அறிக்கை சமர்ப்பிக்க அரசுக்கு சென்னை ஐகோர்ட் உத்தரவு



சென்னை: தமிழகத்தில் யானைகள் வழித்தடங்களாக அறிவிக்க வேண்டிய பகுதிகளை அடையாளம் கண்டு அறிக்கைஅளிக்கமூன்று மாத காலம் அவகாசம் வழங்கி, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் யானை வழித்தடங்களை அடையாளம் கண்டு அறிவிப்பு வெளியிடக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கில், உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின்படி, யானைகள் வழித்தடங்களை கண்டறிய, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் தலைமையில் குழுவை அமைத்து அரசு உத்தரவு பிறப்பித்திருந்தது.

இது தொடர்பான வழக்கு, நீதிபதிகள் என். சதீஷ்குமார் மற்றும் கே. ராஜசேகர் அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, தமிழகத்தில் ஜவாலகிரி - தக்கட்டி, ஜவாலகிரி - அஞ்செட்டி, பில்லிக்கல் - ஜவாலகிரி ஆகிய மூன்று பகுதிகளை, யானைகள் வழித்தடங்களாக அறிவித்து ஆகஸ்ட் 27-ஆம் தேதி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது' என அரசுத்தரப்பில்அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

யானைகள் வழித்தடங்களை கண்டறிய அமைக்கப்பட்டுள்ள குழுவின் தலைவரான முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் வேணு பிரசாத், 'தமிழக அரசு அமைத்துள்ள குழு, 41 பகுதிகளை யானைகள் வழித்தடங்களாக அடையாளம் கண்டுள்ளது. இந்த 41 பகுதிகளையும் யானைகள் வழித்தடங்களாக அறிவிக்க வேண்டுமா என்பது குறித்து ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. ஆய்வுப் பணிகளை முடித்து விரிவான அறிக்கைதாக்கல்செய்ய அவகாசம் வழங்க வேண்டும்' என கோரிக்கை விடுத்தார்.

இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், யானைகள் வழித்தடங்களாக அறிவிக்க வேண்டிய பகுதிகளை அடையாளம் கண்டு அறிக்கைஅளிக்க மூன்று மாத காலம் அவகாசம் வழங்கி, விசாரணையை டிசம்பர் 4-ஆம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

# "தவெக கூட்டணியின் பெயர் செப்டம்பர்9ல் அறிவிப்பு" மாணிக்கம் தாகூர் தகவல்



சென்னை: "பனையூரில் செப்.9-இல் நடைபெறும் தவெக ஆதரவு கட்சிகள் கூட்டத்தில் பங்கேற்போம்; இந்தக் கூட்டத்தில் தவெக கூட்டணிக்கு பெயர் சூட்டப்பட்டு அறிவிக்கப்பட இருக்கிறது." என தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாணிக்கம் தாகூர் தெரிவித்துள்ளார்.

மேலும், ராகுல் காந்தி தான் காங்கிரஸ் கட்சியின் பிரதமர் வேட்பாளர். அந்த சர்ச்சை முடிந்துபோன கதை என்றும் அவர் கூறினார்.

சென்னை சத்தியமூர்த்தி பவனில் செய்தியாளர்களை இன்று சந்தித்த மாணிக்கம் தாகூர், வேட்பாளர் விவகாரம் முடிந்து போன கதை. ஒரு சில பத்திரிகையாளர்கள் தான் முடிந்துபோன கதையை திரும்பத் திரும்பப் பேசி வருகின்றனர். சில பத்திரிகை குழுமங்கள் மதச்சார்பற்ற கூட்டணியில் விரிசலை ஏற்படுத்த பல விதத்தில் பாடுபடுகின்றன. அது தோல்வியுறும். தேசிய, மாநில அளவில் மதச்சார்பற்ற, சமூகநீதியை பாதுகாப்பது நம் அனைவரின் பொறுப்பு.

தமிழகத்தில் முதல்வர் விஜய் தலைமையில், இதை நாங்கள் தெளிவாக எடுத்துச் செல்வோம். இந்திய அளவில் ராகுல் காந்தி இதற்கான பொறுப்பை எடுத்துச் செல்வார். அதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

பனையூரில் செப்.9-ல் நடைபெறும் தவெக ஆதரவு கட்சிகள் கூட்டத்தில் பங்கேற்போம்; இந்தக் கூட்டத்தில் தவெக கூட்டணிக்கு பெயர் சூட்டப்பட்டு அறிவிக்கப்பட இருக்கிறது. இந்தக் கூட்டணி நல்ல நிலைக்குச் செல்ல வேண்டும். பலமாக இருக்க வேண்டும். அனைத்து பிரச்சினைகளிலும் ஒருமித்த கருத்து எடுக்க வேண்டும் என்பதே எங்களின் எண்ணம். ராகுல் காந்தி தான் காங்கிரஸ் கட்சியின் பிரதமர் வேட்பாளர். இந்த விவகாரத்தில் தமிழக முதல்வர் விஜய்யும், அமைச்சர்களும் தெளிவாக இருக்கின்றனர்" இவ்வாறு அவர் பேசினார்.

# "என்னை சிக்கலில் விட்டு விடாதீர்கள்" பிரதமர் வேட்பாளர் குறித்து செங்கோட்டையன் பதில்



கோவை: தமிழக வருவாய்த் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், கோவை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியது: "தமிழக முதல்வர் தொலைநோக்கு சிந்தனையுடன் 110-வது விதியின்கீழ் பல்வேறு திட்டங்களை அறிவித்து வருகிறார். காவல் துறையை பொறுத்தவரை முதல்வரின் நேரடி கட்டுப் பாட்டில் உள்ள துறையாகும். தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு, போதைப்பொருள் தடுப்பு என பல்வேறு நடவடிக்கைகளை முதல்வர் மேற்கொண்டு வருகிறார். மக்களின் எண்ணத்தை பிரதிபலிக்கும் வகையில், முதல்வர் விஜய் செயல்படுகிறார்.

திமுக, அதிமுக என ஒவ்வொரு கட்சியின் ஆட்சியின் போதும், தலைமை செயலகத்தை ஒவ்வொரு பக்கம் கொண்டு வர நினைத்தனர். புதிய தலைமை செயலகத்துக்கு கோடிக் கணக்கில் செலவு செய்வது என்றாலும், காலத்தின் தேவை என்பதால் புதிய அலுவலகம் கட்டப் படுகிறது.

சட்டப்பேரவையில் அனைத்து கேள்விகளுக்கும் முதல்வர் பதில்சொல்ல வேண்டிய தேவை இல்லை" என்று அவர் கூறினார்.

பிரதமர் வேட்பாளராக விஜய் முன் நிறுத்தப்படுகிறாரா என்ற செய்தியாளரின் கேள்விக்கு, "எங்களை பொறுத்தவரை முதல்வர் விஜய் தெளிவாக உள்ளார்.

தமிழக மக்கள் விஜய்யை நம்பி வாக்களித்துள்ளனர். 2 ஆண்டு காலத்தில் கட்சி தொடங்கி, 2 மாதத்தில் புதிய சின்னம் பெற்று, இன்றைக்கு தமிழகத்தில் ஆட்சியை கைப்பற்றி சாதித்துள்ளார்.

என்னை பொறுத்தவரை மக்களை காக்கும் பணிகளை முதல்வர் மேற்கொள்கிறார். மக்கள் விரும்பும் திட்டங்களை மேற்கொண்டு வருகிறார். என்னை சிக்கலில் விட்டு விடாதீர்கள்" என்றார்.

# மின்துறை அறிவிப்புகளை திரும்பப் பெற வேண்டும்: மின் ஊழியர் மத்திய அமைப்பு வலியுறுத்தல்




சென்னை: தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் ஜெயசங்கர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை: சட்டப்பேரவையில் மானிய கோரிக்கையின் போது தூத்துக்குடியில் சூப்பர் கிரிட் தெர்மல் நிலையம் அரசு, தனியார் பங்களிப்புடன் தொடங்கப்படும் என முதல்வர் அறிவித்துள்ளார்.

அதே போல், எண்ணூர் அனல் மின் நிலையமும் தனியார், அரசு பங்களிப்புமூலம் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கேரளா போல கேப்க்ஸ் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை செயல்படுத்தாமல், மின்விநியோக பணிகளையும், மின் கணக்கீட்டு பணிகளையும் - தரவுகளையும் தனியாரிடம் ஒப்படைக்கும் வகையில் டோடெக்ஸ் ஸ்மார்ட் மீட்டர் திட்டம் செயல் படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மின்சார வாரியத்தில் ஐந்தாண்டு ஒப்பந்த முறையில் 10 ஆயிரம் பேர் பணி அமர்த்தப்படுவர் என கூறப்பட்டுள்ளது. இந்த அறிவிப்புகள் மின்சார வாரியம் தனியார் மையத்தை நோக்கி செல்வதை உணர்த்துகிறது.

இந்த அறிவிப்புகளை திரும்பப் பெற வேண்டும். மின் துறையை தனியார் பாதைக்கு கொண்டு செல்லும் முடிவு கண்டிக்கத்தக்கது. எனவே, அரசின் இந்த அறிவிப்புகளை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் இல்லையெனில், மிகப் பெரிய அளவில் போராட்டத்தை நடத்துவோம். இவ்வாறு ஜெயசங்கர் கூறியுள்ளார்.

# Redrawing world map: Why UN wants schools, tech firms to drop Mercator's projection



On the world map found in today's classrooms, Greenland and Africa look about the same size. In reality, Greenland covers 2.16 million sq km. Africa covers 30.3 million, nearly 14 times as much. Even India, at 3.29 million sq km, is bigger than Greenland but the maps we see today suggest otherwise.

On Friday, the United Nations General Assembly voted 164 to one to encourage governments, schools, publishers and technology companies to stop using it. Togo moved the resolution, titled 'Correct the Map', on behalf of the 54-member African Group, with the Bahamas as co-sponsor and the African Union behind it. Estonia, Georgia, Lithuania, Moldova, Serbia and Ukraine abstained. The US cast the single vote against, calling the initiative a radical ideological project and a distraction from questions of peace and prosperity. India voted in favour and then filed a qualification. Raghoo Puri, first secretary at India's permanent mission to the UN, told the assembly that the text should be read as support for equal-area projections in general" and not as endorsing the Equal Earth projection or any other specific map projection".

The text, numbered A/80/L.104, records that a projection built in the 16th century for navigation is still the default in classrooms, newsrooms, digital platforms and official material, and that its distortions shrink the perceived size of Africa, Latin America and South Asia. Instead, it now encourages states, schools, international organisations and technology companies, to use equal-area projections, Equal Earth among them, wherever relative size matters, and to teach students that every flat map distorts something. The resolution describes the correction as an act of "cognitive justice and memorial reparation".

The campaign behind it has been running for more than a year, driven by the advocacy groups Africa No Filter and Speak Up Africa. The African Union adopted Equal Earth in March, Togo carried the case to UN members in April on the Union's behalf, and the assembly held informal consultations on a draft in July.

The fundamental issue is of dimensions and the question of how to represent lines across the planet on a piece of paper (or screen). Carl Friedrich Gauss proved in the 1820s that a sphere cannot be flattened onto a plane without stretching, tearing or squeezing it somewhere, so every projection is a choice about which error to accept. Mercator chose to preserve angles, so that on his map a constant compass bearing is a straight line. That made the projection indispensable at sea, and also made it the reason that the same map ended up on classroom walls.

The error falls on area, and it grows with distance from the equator, so land near the poles swells while land near the tropics does not. India is caught at the compressed end. At 3.29 million sq km it is half again as large as Greenland, and on a Mercator wall map Greenland looks several times bigger. The resolution records the same effect across Africa, Latin America and South Asia.

# முன்னாள் எம்.எல்.ஏ. அசன் மௌலானா தேர்தலில் போட்டியிட 3 ஆண்டு தடை தேர்தல் ஆணையம் உத்தரவு



சென்னை: காங்கிரஸ் முன்னாள் எம்எல்ஏ அசன் மௌலானாவுக்கு தேர்தலில் போட்டியிட மூன்று ஆண்டுகள் தடை விதித்து இந்திய தேர்தல் ஆணையம் அதிரடி உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2021-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் வேளச்சேரி சட்டமன்ற தொகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் அசன் மௌலானா. தனது தேர்தல் செலவாக ரூ.17,03,548 செலவிட்டதாக தேர்தல் ஆணையத்திடம் கணக்கு தாக்கல் செய்திருந்தார்.

ஆனால், தேர்தல் காலமான 2021 மார்ச் 27,28 மற்றும் ஏப்ரல் 3 ஆகிய தேதிகளில் 10 முன்னணி நாளிதழ்களில் அவரை ஆதரித்து விளம்பரங்கள் வெளியிடப்பட்டது தேர்தல் ஆணையத்தின் விசாரணையில் தெரிய வந்துள்ளது. ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு, மாவட்டத் தேர்தல் கண்காணிப்புக் குழு ஆகியவற்றின் ஆய்வின்படி, அந்த விளம்பரங்களுக்கான செலவு ரூ.32,05, 915 என மதிப்பிடப்பட்டது. இந்தத் தொகையையும் அசன் மௌலானா கணக்கில் காட்டிய ரூ.17,03,548-யையும் சேர்த்தால், அவரது மொத்த தேர்தல் செலவு ரூ.49,09,463 ஆகும்.

2021- ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது ஒரு வேட்பாளருக்கான தேர்தல் செலவு உச்சவரம்பு ரூ.30.80 லட்சமாக இருந்த நிலையில், அசன் மௌலானாவின் தேர்தல் செலவு அந்த வரம்பை மீறியதாக கண்டறியப்பட்ட நிலையில் நிலையில், இது தொடர்பாக அவருக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பிது.

இது குறித்து இந்திய தேர்தல் ஆணையத்திற்கு அசன் மௌலானா விளக்கம் அளித்திருந்தார். அதில், "தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ள விளம்பரங்கள், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில் வெளியிடப்பட்டது. எனவே, அதற்கான செலவுக்கு தான் பொறுப்பல்ல" என்று குறிப்பிட்டிருந்தார்.

விளம்பரங்களில் வேட்பாளரின் பெயர், புகைப்படம் இடம்பெற்றிருந்ததுடன், குறிப்பிட்ட தொகுதி மக்களிடம் அவருக்கு வாக்களிக்குமாறு நேரடியாகக் கோரப்பட்டிருந்ததால், அந்தச் செலவு வேட்பாளரின் தேர்தல் செலவாகக் கருதப்படும் என இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்திருந்தது. இது தொடர்பாக உச்ச நீதிமன்றம் ஏற்கனவே வழங்கிய தீர்ப்புகளையும் தேர்தல் ஆணையம் மேற்கோள்காட்டியிருந்தது.

இதையடுத்து, தேர்தல் செலவுக்கணக்கை முறையாக தாக்கல் செய்யத்தவறியது கண்டறியப்பட்டுள்ளதால் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951-ன் பிரிவு 10A-ன் கீழ் அசன் மௌலானாவைத் தேர்தலில் போட்டியிட மூன்று ஆண்டுகளுக்கு தடை விதித்து இந்திய தேர்தல் ஆணையம் அதிரடியாக உத்தரவிட்டுள்ளது. இதையடுத்து, தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் உத்தரவின் பேரில் தமிழ்நாடு அரசிதழிலும் வெளியிடப்பட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 முதல் மூன்று ஆண்டுகளுக்கு நாடாளுமன்றத்தின் மக்களவை, மாநிலங்களவைப் பதவிக்கும், மாநில சட்டமன்றத் தேர்தலிலும் அசன் மௌலானா போட்டியிட முடியாது.

இது குறித்து சென்னையில் உள்ள தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைமை அலுவலகமான சத்தியமூர்த்தி பவனில் செய்தியாளர்களைச் சந்தித்த முன்னாள் எம்எல்ஏ அசன் மௌலானா, "தேர்தலின்போது செலவுச் செய்யப்பட்ட கணக்கு வழக்குகளை முறையாகத் தாக்கல் செய்யவில்லை எனக் கூறி மூன்று ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிட இந்திய தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது. ஆனால் முறையான செலவு, காங்கிரஸ் தலைமைச் செய்த செலவு விவரத்தையும் தன்னுடைய கணக்கில் கணக்கு காட்டப்பட்டுள்ளதாகவும், முறையாக அதை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் காலம் தாழ்த்தி தனக்கு இந்திய தேர்தல் ஆணையம் தீர்ப்பு வழங்கியுள்ளது; இது செல்லாது" எனத் தெரிவித்துள்ளார்.

பாஜகவிற்கு தன் மீது என்ன காழ்ப்புணர்ச்சி என்று தெரியவில்லை; அதனால்தான் இப்படி ஒரு உத்தரவை இந்திய தேர்தல் ஆணையம் கொடுத்துள்ளது என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.